# உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் - முகவுரை

மனித குடும்பத்தில் ஒவ்வொருவருடைய சுயமான கௌரவத்தையும், பிரித்தாளப்படமுடியாத உரிமைகளையும் அங்கீகரித்தலே உலகத்தில் சுதந்திரம், நீதி , சமாதானம் என்பனவற்றிற்கு அடிப்படையானதாலும்

மனித உரிமைகள் பற்றிய சிரத்தையின்மையும் அவைகளை அவமதித்தலும் மனுக்குல மனசாட்சியினை அவமானப்படுத்துகிற காட்டுமிராண்டித்தனமான செயல்களாலும் , பேச்சுச் சுதந்திரம், நம்பிக்கைச் சுதந்திரம் , அச்சம், வறுமை போன்றனவற்றிலிருந்தும் விடுதலை என்பது மனிதன் முழுவதுமாக அனுபவிக்கத்தக்க ஒன்றாக பிரகடனமாக்கப் படுத்துதலாலும்

கொடுங்கோலாட்சிக்கும் அடக்குமுறைகளுக்கும் முடிவுகட்ட வேண்டி எழுச்சி செய்ய மனிதன் நிர்பந்திக்க படாமலிருக்க வேண்டுமானால் சட்டத்தின் ஆட்சி மனிதவுரிமைகளை பாதுகாக்க வேண்டுவது முக்கியமானதாகயுள்ளதாலும்

நாடுகளிடையே நட்புறவு உருவாக்குதலை செயல்படுத்துதல் அத்தியாவசியமாக உள்ளதாலும் ஐக்கிய நாடுகள் சபையில் சகலரும் எழுத்து ப்பூர்வமான முறையில் அடிப்படை மனித உரிமைகள் பற்றின நம்பிக்கையை ஒவ்வொரு மனிதனின் சுயமரியாதை பெறுமதிப்பு, ஆண்பெண் சமயுரிமை போன்றனவற்றை மீட்டு எடுக்க வலியுறுத்தியும் நற்சுதந்திர வெளிச்சத்தில் முன்னேற்றம் , உயர்ந்த வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை மேம்படுத்த துணிந்துள்ளதாலும்

ஐக்கிய நாடுகளோடு கைகோர்த்து உறுதியெடுத்து , மனித உரிமைகள், அடிப்படை சுதந்திரம் போன்றன மூலம் உலக நன்மதிப்பையும் அதிகரித்தலாலும்

இந்த உறுதிமொழியை முழுவதுமாக நடைமுறைபடுத்துவதற்கு சொல்லப்பட்ட உரிமைகள், சுதந்திரங்கள் பற்றின பொதுவிளக்கம் முக்கியமானதாலும் இதன்வழியாக:

## உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனப்படுத்துவது என்னவெனில்:

சமுதாயத்தில் ஒவ்வொரு அமைப்பும் இப்பிரகடனத்தை தவறாமல் மனதில் கொண்டு செயல்பட உரிமைகள், சுதந்திரங்களுக்கான மதிப்பீடுகளை மேம்படுத்துவதற்கு கற்றுக்கொடுத்தல் மூலமும் , கல்வி வழியாகவும், தேசிய, சர்வதேசிய முன்னேற்ற செயல்கள் மூலமும், தொடர் முயற்சிகள் மூலமாகவும் அங்கவகிக்கும் நாடுகள் ஒவ்வொன்றும் அவரவர் மக்களிடையும் மேலும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வரும் அந்தந்தப்பகுதி மக்களியிடையேயும் இவ்வுரிமைகள், சுதந்திரங்கள் முழுவதுமாக வலிமையுடன் பயன்படுத்தப்பட வேண்டியதற்காகவும், பயன்படுத்தத்தக்க முறையில் எல்லா மக்களும் நாடுகளிலுள்ளோர்களும் அவரவர் சாதனை என்பதன் பொது

அளவாகக் கொள்ளத்தக்க முறையில் உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தை பொதுச் சபை எடுத்து இயம்புகிறது .

சரத்து **-1** எல்லா மனிதர்களும் சுதந்திரமாகவே பிறக்கிறார்கள். இப்படி இவர்கள் மதிப்பிலும், உரிமைகளிலும் சமமானவர்கள். பகுத்தாராயுதலையும், மனசாட்சியையும் இயல்பாகவே பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் சகோதர உணர்வு கொண்டு நடக்க வேண்டும்.

சரத்து **-2** இனம் , நிறம் பாலினம், மொழி, மதம், அரசியல் அல்லது அதுபோன்ற வேறெந்தக் கருத்து வேறுபாடுகள் மேலும் தேசிய அல்லது சமூக அடிப்படை சொத்து, பிறப்பு, அல்லது பிற அந்தஸ்து என்பன உள்ளிட்ட வேறுபாடுகள் எதுவுமின்றி, இப்பிரகடனத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் அனைவரும் பங்குதாரராவார்கள் . கட்டுப்பாட்டு ரீதியான , உலக அங்கீகாரம் சார்ந்த , நம்பிக்கை சார்பு ரீதியான ,தன்னாட்சியில்லா நிலையிலான அல்லது எந்த வகையிலும் இறையாண்மை மட்டுப்படுத்தப்பட்ட நாடாக இருந்தாலும் அங்கும் எந்த மனிதரிடமும் வேறுபாடு எதுவும் காட்டிடக்கூடாது.

சரத்து **- 3** ஒவ்வொருவரும் வாழ்வதற்கும் , சுதந்திரத்திற்கும் , பாதுகாப்பாக இருப்பதற்கும் உரிமை பெற்றவர்களாவார்கள்

சரத்து **-4** எவரையும் அடிமையாக நடத்துதலும் , அடிமைப்பட்ட நிலை என்ற ஒன்றினைக் கோட்பாடக்கலும் கூடாது. அடிமைகளை வியாபாரம்மாக்கலும் எல்லாவகையிலும் தடை செய்யப்படவேண்டும்.

சரத்து **-5** யாரையும் சித்திரவதைக்கோ, அல்லது கொடுமையான மனிதத் தன்மையற்ற இழிநிலைக்கோ தள்ளக்கூடாது. மேலும் இழிவான முறைகளை பயன்படுத்தி தண்டிக்கக்கூடாது.

சரத்து **-6** சட்டத்தின் முன்னர் எல்லாரும் மாந்தர் என்ற முறையில் அங்கீகரிக்கப்பட அவர்களுக்கு உரிமை உண்டு

சரத்து **- 7** சட்டத்தின் முன்னர் அனைவரும் சமம் மேலும் எந்த பாரபட்சமின்றி சட்டத்தின் பாதுகாப்பு அனைவருக்கும் சொந்தம். இந்த பிராமணத்திற்கு புறம்பான வகையில் பாகுபாடான அத்துமீறல், அதற்கு தூண்டுதலாய் இருத்தல் என இவையனைத்திற்கும் எதிரான பாதுகாப்பு அனைவருக்கும் சொந்தம்.

சரத்து **-8** நாட்டிலுள்ள அரசியலமைப்பு சட்டம் அல்லது வரையறுக்கப்பட்ட சட்டம் மூலம் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கெதிரான அத்துமீறல்களை நாட்டின் தகுதியான நீதியமைப்புக்களைக் கொண்டு சரியான முறையில் நடவடிக்கை மேற்கொள்ளக் கோர நாட்டில் அனைவருக்கும் உரிமை உண்டு.

சரத்து **-9** ஒருவரையும் தான்தோன்றித் தனமாக கைது செய்யவோ, அடைத்து வைக்கவோ , நாடுகடத்தவோ கூடாது.

சரத்து **-10** ஒவ்வொருவருடைய உரிமைகள், கடைமைகள் சார்ந்தும் மேலும் அவர்களின்மேல் சுமத்தப்படும் குற்றங்கள் சார்ந்தும் பாரபட்சமற்ற தன்னாட்சியான நீதியமைப்பு மூலம் நேர்மையான, வெளிப்படையான நடைமுறை கொண்டு வழக்குகள் நடத்தப்படுதலுக்கு ஒவ்வொருவருக்கும் முழுமையான சரிசமமான உரிமையுண்டு

சரத்து **-11**

1. குற்ற வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவரும் குற்றமற்றவன் என குற்ற நடைமுறை வழக்குகள் நடத்தப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவரின்

சாட்சிகளையெல்லாம் விசாரித்து நிரூபிக்கப்படும் வரையிலும் எண்ணப்பட உரிமையுண்டு

2. குற்றம் சாட்டப்பட்ட எவரொருவர் சட்டத்திற்கு புறம்பாக செய்ததாகவும் , சட்டப்படி செய்யாதாகவும் சொல்லப்படும் எந்த தேசிய, சர்வதேசிய நிகழ்வும் குற்றம் என நடைமுறையில் அந்த நேரத்தில் சட்டத்திலிருந்தாலன்றி அவர் குற்றமற்றவர் ஆவார். அதேபோன்றே குற்றம் சாட்டப்பட்டபோது நடைமுறையிலுருந்த தண்டனை மாத்திரமே அவருக்கு வழங்கப்பட முடியுமே தவிர அதைவிட கூடுதலான தண்டனை வழங்கப்படலாகாது

சரத்து **-12** எவரொருவரும் அவருடைய தனிமனித வாழ்க்கை சார்ந்தோ, குடும்பம் சார்ந்தோ, வீடு சார்ந்தோ, அல்லது எழுத்துப்பூர்வமான நடவடிக்கைகள் சார்ந்தோ தன்னிச்சையான முறையில் அவரது தனி வாழ்வியலில் மற்றொருவரால் உள் நுழைய அனுமதியில்லை. அவரின் நன்மதிப்பு, நற்பேற் கெடும் வண்ணம் நடந்துகொள்ளவும் அனுமதியில்லை. மேலும், மேற்கண்ட முறையில் ஒருவர் பாதிக்கப் படும்போது சட்டம் அவருக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டி, அவர் சட்ட பாதுகாப்பினை நாட அவருக்கு முழு உரிமையுண்டு.

சரத்து **-13**

1. ஒவ்வொருவருக்கும் அவரவரது நாட்டின் எல்லைக்குள் சுதந்திரமாக பயணம் செய்யவும் தங்களின் இருப்பிடத்தை அமைத்துக்கொள்ளவும் உரிமையுண்டு
2. ஒவ்வொருவரும் தனது சொந்த நாடு உட்பட எந்த நாட்டை விட்டு செல்லவும் , மறுபடியும் தத்தமது நாட்டுக்கு திரும்பவும் உரிமையுண்டு.

சரத்து **-14**

1. துன்புறுத்தல்களிலிருந்து புகலிடம் தேடி மற்ற நாடுகளில் அடைக்கலம் பெற்று சிறப்பாக வாழ ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.
2. அரசியல் குற்றங்கள் அல்லாத குற்றங்கள் சார்ந்தோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள் , நெறிகளுக்கும் முரணாக எழும் செயல்கள் சார்ந்தோ உள்ள உண்மையான குற்ற வழக்குகள் மூலம் எழும் துன்புறுத்தல்களுக்காக இந்த உரிமை பயன்படுத்தப்படலாகாது.

சரத்து **-15**

1. ஒவ்வொருவரும் ஒரு தேசிய இனத்தினராக இருக்க உரிமையுண்டு
2. தன்னிச்சையாக ஒருவருடைய தேசிய இனத்தினை அவரிடமிருந்து பறித்துக் கொள்ளக் கூடாது மேலும், ஒருவர் அவரின் தேசிய இனத்துவத்தை மாற்றும் உரிமை அவருக்கு மறுக்கப்படலாகாது

சரத்து **-16**

1. முழுமையான வயதடைந்த ஆண்களும் பெண்களும் இனம், தேசியம் , மதம் இவற்றிக்கு அப்பாற்பட்டு திருமணம் செய்துகொள்ளவும் அதன் மூலம் ஒரு குடும்பத்தை உருவாக்கவும் உரிமை உடையவர்களாவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் திருமணத்திற்கும் , திருமண வாழ்க்கை வாழ்வதற்கும், திருமணம் ரத்து செய்யப்படும்போதும் சம உரிமை பெற்றவர்களாவார்கள்
2. இருவரின் சுதந்திரமான முழு சம்மதத்துடன் மட்டுமே திருமணம் நடைபெற வேண்டும்

3. குடும்பம் என்பது இயற்கையானதும் அடிப்டையானதுமான சமுதாயத்தின் ஒரு அங்கமாகும்

சரத்து **-17**

1. ஒவ்வொருவரும் தனியாகவும் மற்றவருடன் கூட்டாகவும் சேர்ந்து சொத்து எதுவும் வைத்துக்கொள்ள உரிமையுண்டு
2. தன்னிச்சையாக ஒருவருடைய சொத்தினை கையகப்படுத்தலாகாது

சரத்து **-18** ஒவ்வொருவரும் சுதந்திரமாக சிந்திக்கவும், மனசாட்சியுடன் செயலாற்றவும் , எந்த மதத்தினை சார்ந்திருக்கவும் உரிமையுண்டு, இதில் தன்னுடைய மதத்தினை , நம்பிக்கையை சுதந்திரமாக மாற்றிக்கொள்ளும் உரிமையும் அடங்கும். மேலும், தனியாகவோ, ஒரு குழுவாகவோ தாங்கள் சார்ந்த மதம் அல்லது நம்பிக்கையை போதனைசெய்தல், கடைபிடித்தல், ஆராதனை செய்தல், மதச்சடங்குகள் செய்தல் போன்றன மூலம் பகிரங்கமாகவோ அல்லது அந்தரங்கவோ வெளிப்படுத்த சுதந்திரமான உரிமையுண்டு.

சரத்து **-19** ஒவ்வொருவரும் கருத்துச் சுதந்திரத்துக்கும் , பேச்சுச் சுதந்திரத்துக்கும் உரிமையுண்டு , இது ஒவ்வொருவரும் எந்த இடையூறுமின்றி கருத்துக்களை கொண்டிருக்கும் உரிமையையும் உள்ளடக்கியதாகும், மேலும், எல்லைகளை பொருட்படுத்தாமலும் எந்த வழிவகைகளை மேற்கொண்டும் தகவல்களையும் கருத்துகளையும் நாடுவதற்கும், பெறுவதற்கும், பரப்புவதற்குமான சுதந்திரத்தையும் உள்ளடக்கும்

சரத்து **-20**

1. ஒவ்வொருவரும் அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கும் இணைவதற்குமான சுதந்திரத்திற்கான உரிமை உண்டு
2. ஒருவரும் ஒரு அமைப்பை சார்ந்திருக்க எவராலும் கட்டாயப்படுத்தலாகாது

சரத்து **-21**

1. ஒவ்வொருவரும் தாங்கள் சார்ந்த நாட்டின் அரசாங்கதில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குபெறுவதற்கு உரிமையுண்டு.
2. ஒவ்வொருவரும் தாங்கள் சார்ந்த நாட்டின் பொதுச்சேவையினை சமமான முறையில் பெறுவதற்கு உரிமையுண்டு .
3. மக்களின் விருப்பமே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைய வேண்டும்.இந்த விருப்பமென்பது காலாகாலத்தில் உண்மையாக நடைபெறும் தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தப்படவேண்டும் இந்த தேர்தல்கள் பொதுவானதும் மேலும் சமமானதுமான வாக்களிப்புரிமை மூலமே இருக்க வேண்டும். இத்துடன் இரகசிய வாக்குமூலம் அல்லது அதற்குச் சமமான, சுதந்திரமான வாக்களிப்பு நடைமுறைகளைக்கொண்டு நடைபெறவேண்டும்.

சரத்து **-22** ஒவ்வொருவரும் சமூக அங்கத்தினராக சமூகப் பாதுகாப்புக்கு உரிமையுடையவர். அத்துடன் தேசிய முயற்சி மூலமும் சர்வதேசிய நாடுகளுடனான ஒத்துழைப்பு கொண்டும் ஒவ்வொரு நாடும், அமைப்பு முறைக்கும் , வளங்களுக்கும் இயைந்தாற்போல் ஒவ்வொருவரும் தத்தம் மதிப்புக்கும் , தத்தம் ஆளுமையைச் சுதந்திரமான முறையில் அபிவிருத்தி செய்யவும் மிகத் தேவையானவைகளாகக் கொள்ளப்படும் பொருளாதார, சமூக பண்பாட்டு உரிமைகளை பெறுவதற்கும் உரியவராவார்

சரத்து -23

1. ஒவ்வொருவரும் வேலை செய்வதற்கும், தங்களின் தொழிலை தாமாக தெரிந்து கொள்வதற்கும் , முறையான, சாதகமான நிலையில் வேலையை தெரிந்துக் கொள்ளவும், வேலையில்லாத் திண்டாத்திற்கு எதிராக தன்னைக் காத்துக்கொள்ளவும் உரிமை உண்டு.

2. ஒவ்வொருவரும் எந்த பாகுபாடுமின்றி சமமான வேலைக்கு சமமான ஊதியம் என்பதற்கு உரிமையுடைவர்கள்

3. வேலைசெய்யும் ஒவ்வொருவரும் சரியான, சாதகமான ஊதியத்திற்கு உரிமையுடையவர்களாவார்கள். இது அவர்களுக்கும், அவர்களது குடும்பத்திற்கும் மனித மாண்புடன் வாழ்வதற்கானதாகவும், தேவைப்படின் வேறுபல சமூக பாதுகாப்புகள் மூலம் குறைபாடுகளைக் களைந்து வாழ்வதற்கானதாகவும் இருக்கவேண்டும் .

4. ஒவ்வொருவருக்கும் தொழில் சங்கங்களை அமைப்பதற்கும் , தங்கள் நலனை பாதுகாக்கவேண்டி அவற்றில் சேருவதற்கும் உரிமையுண்டு

சரத்து -24

ஒவ்வொருவரும் ஓய்வு, இளைப்பாறுதல் போன்றன மூலமும் , அத்தோடு வரையறுக்கப்பட்ட வேலை நேரம் அனுமதிக்கப் படுத்தல் மூலமும், ஊதியத்துடன் கூடிய முறையான விடுப்புகள் மூலமும் செயலாற்ற உரிமையுண்டு.

சரத்து -25

1. ஒவ்வொருவரும் உணவு உடை, வாழவீடு, மருத்துவக் கவனிப்பு , சமூகச் சேவைகள் உட்பட , தமதும் தமது குடும்பத்திற்குமான உடல்நலம், நல்வாழ்வுக்கும், தேவையான வாழ்க்கைத் தரத்துக்கும் உரிமையுடையவர்களாவர். மேலும் வேலையில்லா நேரத்தில் பாதுகாப்பு, நோயில், இயலாமையில், கணவனை இழந்தவேளையில் , முதுமையில், இதுபோன்ற தன்னுடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட இயலாமைகளிலும் பாதுகாப்புக்கு உரிமையுடையவர்களாவார்கள்.

2. சிறப்பு கவனிப்பும் உதவியும் தாய்மை அடையும் போதும் , குழந்தைப் பருவத்திலிருக்கும் போதும் அவர்களுக்கு அளிக்கப்படல் வேண்டும். எல்லாக் குழந்தைகளும் திருமண உறவினுள் பிறந்திருந்தாலும் இல்லாவிட்டாலும் சமமான சமூகப் பாதுகாப்புக்கு உரியர்வர்கள்தான்.

சரத்து -26

1. ஒவ்வொருவரும் கல்விக் கற்க உரிமையுண்டு. கல்வி என்பது குறைந்தது தொடக்க, அடிப்படை கட்டங்களிலாவது இலவசமானதாயிருத்தல் வேண்டும். கட்டாயமான தொடக்க கல்வி என்ற நிலை வேண்டும். தொழில் நுட்பக் கல்வியும், உயர் தொழில் கல்வியும் பொதுவாய் பெறக்கூடியதாக இருக்க வேண்டும். உயர்கல்வி எல்லாருக்கும் சமமான முறையில் திறமையடிப்படையில் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

2. கல்வி என்பது மனித ஆளுமையை முழுமையாக விருத்தி செய்யக்கூடியதாகவும், மனிதயுரிமைகளுக்காகவும் அடிப்படை சுதந்திரங்களுக்காகவும் தேவையான மரியாதையை வலுப்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும். கல்வி என்பது எல்லா நாடுகள், இனங்கள்,மதங்கள் மத்தியில் புரிதலை, சகிப்புத்தன்மையை, நட்புறவை வளர்ப்பதாக இருக்க வேண்டும். இந்தக் கல்வியானது சமாதானத்தை பேணுவதற்காக ஐக்கிய

நாடுகள் சபையின் முயற்சிகளுக்கு உதவுவதாக இருக்க வேண்டும்.

3. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கான சரியான கல்வியை முதலிலே தெரிந்தெடுக்கும் உரிமை அவர்களுக்குண்டு.

சரத்து **-27**

1. ஒவ்வொருவருக்கும் சமுதாயத்தின் பண்பாட்டு நிகழ்ச்சிகளில் சுந்தந்திரமாக பங்குகொள்ளவும், கலைகளை பயன்படுத்துவற்கும், அறிவியல் முன்னேற்றத்திலும் அதனால் வரும் நன்மைகளிலும் பங்கெடுப்பதற்கும் உரிமை உண்டு.

2. ஒவ்வொருவருக்கும் அறிவியல், இலக்கிய , கலைப் படைப்பின் ஆசிரியர் என்ற வகையில் அப்படைப்புகளின் மூலம் வரும் பொது, பொருள் உதவிகளையும் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை உண்டு.

சரத்து **-28** ஒவ்வொருவருக்கும் சமூக, சர்வேதேசிய ஒழுங்கு முறையின்படி இந்தப் பிரகடனத்தில் காட்டப்படும் எல்லா உரிமைகளும், சுதந்திரங்களும் உண்டு என்பதனை உணர உரிமையுண்டு.

சரத்து **-29**

1. தடையற்ற, முழுமையான ஆளுமை வளர்ச்சி ஒருவரால் எந்தச் சமுதாயத்தின் மூலம் எய்தப்பட முடியுமோ அந்தச் சமுதாயத்திற்குக் கடமையாற்றும் பங்கு அவருக்கு உண்டு.

2. உரிமைகளையும், சுதந்திரங்களையும் செயல்படுத்த முயலும் போது சட்டத்திற்கும் சட்ட நெறிகளுக்கும்யுட்பட்டு இன்னொருவரின் உரிமைகளுக்கும், சுதந்திரங்களுக்குமுரிய அங்கீகாரத்தையும், மதிப்பையும், அத்தோடு, ஒழுக்கநெறிகளுக்கும், பொது அமைதிக்கும், பொதுநலத்துக்கும் நீதியான முறையில், மக்கள் நலன் கருதும் சமுதாயத்தில், செயல்படுத்த வேண்டுபவனவற்றை செயல்படுத்த வேண்டும்.

3. இவ்வுரிமைகளும், சுதந்திரங்களும் ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களுக்கும், நெறிகளுக்கும் முரண்பாடுள்ளவைகளாக ஒரு போதும் செயல்படுத்தப்பட முடியாது.

சரத்து **-30** இந்த பிரகடனத்திலுள்ள எதனையும், இதன்மூலம் எடுத்தியியம்பும் உரிமைகளையும், சுதந்திரங்களையும் அழிக்கும் நோக்கத்துடன் செயல்படும் எந்த ஒரு முயற்சிக்கும், செயலுக்கும், உள்நோக்கமாக எந்த ஒரு நாட்டுக்கோ, குழுவுக்கோ அல்லது ஒருவருக்கோ உரிமை கொடுக்கப்பட்டதாக பொருள் கொள்ளக்கூடாது.

*****************